செ.வெ.எண்:47 நாள்:23.10.2021

**கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனஹள்ளி ஊராட்சி ஒன்றியம், நாடுவனப்பள்ளி ஊராட்சி, இராமசந்திரம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் , 6-வது கட்டமாக நடைபெற்ற மாபெரும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாமை, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ,ப. அவர்கள் இன்று (23.10.2021) நேரில் பார்வையிட்டார்.**

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 5 கட்டமாக நடைபெற்ற கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாமில் 2 இலட்சத்து 59 ஆயிரத்து 869 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது**

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 6 வது கட்டமாக மாபெரும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாம் 819 இடங்களில் நடைபெற்றது என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி ஊராட்சி ஒன்றியம், நாடுவனப்பள்ளி ஊராட்சி, இராமசந்திரம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 6 வது கட்டமாக மாபெரும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாமை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப. அவர்கள் இன்று (23.10.2021) நேரில் பார்வையிட்டார்.

**மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கும் போது:**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் (12.09.2021 முதல் 10.10.2021) 5 கட்டமாக மாபெரும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் சிறப்பு முகாம் நடைபெற்றது. அதனை தொடர்ந்து இன்று 6 வது கட்டமாக கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாம் கிருஷ்ணகிரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் 2 முகாம், அரசு தலைமை மருத்துவமனையில் 6 முகாம் ஓசூர் இ.எஸ்.ஐ மருத்துவமனையில் 1 முகாம், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 61 முகாம், காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியத்தில் 94 முகாம், சூளகிரி ஊராட்சி ஒன்றியத்தில் 76 முகாம் பர்கூர் ஊராட்சி ஒன்றியத்தில் 100 முகாம், ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தில் 70 முகாம், மத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 80 முகாம், தளி ஊராட்சி ஒன்றியத்தில் 75 முகாம், வேப்பனஹள்ளி ஊராட்சி ஒன்றியத்தில், 50 முகாம், கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்தில் 50 முகாம், ஓசூர் ஊராட்சி ஒன்றியத்தில் 100 முகாம் மற்று கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் 54 முகாம் என மொத்தம் 819 சிறப்பு முகாம்களில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாம் நடைபெற்றது.

இதுவரை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 5 கட்டமாக நடைபெற்ற கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாமில் 2 இலட்சத்து 59 ஆயிரத்து 869 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

இன்று வரை கோவிஷில்டு 2 இலட்சத்து 14 ஆயிரத்து 480 தடுப்பூசிகளும், கோவேக்சின் 9 ஆயிரத்து 090 தடுப்பூசிகள் என மொத்தம் 2 இலட்சத்து 23 ஆயிரத்து 570 தடுப்பூசிகள் இருப்பில் உள்ளது.

முதல் தவணை தடுப்பூசி கோவிஷீல்டு செலுத்திக் கொண்டவர்கள் 84 நாட்கள் கழித்தும், கோவேக்சின் செலுத்திக் கொண்டவர்கள் 28 நாட்கள் கழித்து இரண்டாவது தவணை தடுப்பூசி போட்டு கொள்ள வேண்டும். அதேப்போல முதல் தவணை கொரோனா தடுப்பூசி செலுத்தி பின்பு இரண்டாவது தவணை தடுப்பூசி செலுத்திக்கொள்ளாதவர்கள் தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும். கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்டால் கொரோனா நோய் அறிகுறி ஏற்பட்டாலும் அவசர சிகிச்சை தேவைபடாமலும், ஆக்ஸிஜன் தேவை ஏற்படாமலும் இருக்கும் எனவே பொதுமக்கள் தவறாமல் சிறப்பு முகாம்களில் தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.வி.கோவிந்தன், வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர். சரவணன், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.டி.சென்னகிருஷ்ணன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.சாவித்திரி, ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.வளர்மதி குணசேகரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**